செய்தி வெளியீடு எண்:613 நாள்:14.08.2021

**செய்தி வெளியீடு**

**முதுபெரும் தலைவர் திரு. என். சங்கரய்யா அவர்களுக்கு**
**‘தகைசால் தமிழர்’ விருது**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (14.8.2021) செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டையில் உள்ள மூத்த தலைவர் திரு. என். சங்கரய்யா அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியதற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திரு.என். சங்கரய்யா அவர்களுக்கு இவ்வாண்டிற்கான “தகைசால் தமிழர்" விருதினை வழங்கி, கௌரவித்தார். மேலும், “தகைசால் தமிழர்" விருதுடன், பத்து இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கினார்.

மூத்த தலைவர் திரு. என். சங்கரய்யா அவர்கள் “தகைசால் தமிழர்" விருதுடன் வழங்கப்பட்ட பத்து இலட்சம் ரூபாய்க்கான காசோலையை, கொரோனா நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.

தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், “தகைசால் தமிழர்" என்ற பெயரில் புதிய விருதினை உருவாக்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். இவ்வாண்டிற்கான “தகைசால் தமிழர்" விருதிற்கு, இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, மாணவத் தலைவராகவும், சுதந்திரப் போராளியாகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் அரும்பணியாற்றியதுடன், தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி, சமீபத்தில் 100 வயதை அடைந்த தமிழர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திரு.என்.சங்கரய்யா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு.துரைமுருகன், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.க. பொன்முடி, மாண்புமிகு ஊரக தொழிற் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு, சட்டமன்ற உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு.கே. பாலகிருஷ்ணன், மத்தியக் குழு உறுப்பினர்கள் திரு.டி.கே. ரங்கராஜன், திரு. ஏ. சௌந்தரராஜன், பொதுத் துறை செயலாளர் டாக்டர் டி. ஜகந்நாதன், இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஆ.ர. ராகுல்நாத், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

•••••••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9